சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 09.07.2024

SC.129/2021

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | பூங்கொடி | தொழில் | : |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : |
| விலாசம் | : | | | |

**அ.சா.3**

---

முதல் விசாரணை

நான் கூடலூர் வார்டு-13, தம்மணம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் டீ கடை வைத்து நடத்தி வருகிறேன். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு மணி சுமார் 2.30 மணியளவில் நல்லதம்பி எங்கள் டீ கடையில் வந்து மருந்து அடிப்பது சம்மந்தமாக பேசிக்கொண்டிருந்தார். அப்போது 1ம் எதிரி ராஜா அரிவாளையும், எதிரிகள் கீதா, மீனா, குமாரி ஆகியோர்கள் விளக்கமாரை எடுத்து வந்து நல்லதம்பியை அடித்தார்கள். வருவாய் துறையில் இல்லாதவர்களுக்கு வீடு கொடுத்தார்கள். எதிரிகளுக்கு வீடு கிடைக்காமல் போய்விடும் என்பதற்காக நல்லதம்பியை அடித்து அவமானப்படுத்தினார்கள். ராஜா என்பவர் அரிவாளை எடுத்து நல்லதம்பி கையில் வெட்டியும், அவரது வேஸ்டியை அவிழ்த்து விட்டும், அடித்தும் எதிரிகள் அவமானப்படுத்தினார்கள். அதன்பின்னர் என் கணவர் பாண்டி நல்லதம்பியை கம்பம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சிகிச்சைக்கு சேர்த்தார். ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.